டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 31.10.2024 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 113 - Madurai | Online Edition

# தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, அக்.30

தமிழகத்தில் வருகிற 2ம் தேதி வரை பல்வேறு மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மன்னார் வளைகுடா பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகளை ஒட்டிய பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக இன்று (31ம் தேதி) தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். திண்டுக்கல், மதுரை, திருச்சிராப்பள்ளி, கரூர், நாமக்கல், சேலம், ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

நாளை நவம்பர் 1ம் தேதி தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர். திருப்பூர், ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, தேனி, திண்டுக்கல், தென்காசி, மதுரை, விருதுநகர், புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமனழ பெய்ய வாய்ப்புள்ளது.




**தீபாவளி நல்வாழ்த்துக்கள்**

வாசகர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் வேளாண்மைத் துறையினர் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

**விடுமுறை அறிவிப்பு**

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 31/10/24 மற்றும் 01/11/24 ஆகிய இரண்டு நாட்கள் அக்ரிடாக்டர்.இன் மின்னிதழ் அலுவலகத்திற்கு விடுமுறை. எனவே வெள்ளி (01/11/24) மற்றும் சனிக்கிழமை (02/11/24) மின்னிதழ் வராது. அடுத்த மின்னிதழ் ஞாயிற்றுக்கிழமை (03/11/24) வெளிவரும்.

– நிர்வாகி

# சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இயற்கை விவசாயம் குறித்த ஒரு நாள் நிலையப் பயிற்சி

திருச்சி, அக்.30

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, இரசாயனம் இல்லாத உணவை நாமே உற்பத்தி செய்து விவசாயிகள் பயன்பெறும் விதமாக இயற்கை விவசாயம் பற்றிய ஒரு நாள் நிலையப் பயிற்சி 5.11.24 அன்று நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் இயற்கை விவசாயம், இயற்கை விவசாயத்தால் ஏற்படும் நன்மைகள், இயற்கை இடுபொருள் தயாரிப்பு குறித்து விளக்கம் அளிக்கப்பட உள்ளது.




இந்த பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் 0431-2962854, 91717 17832 என்ற எண்ணில் அலுவலக நேரத்தில் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்றோம் அல்லது 91717 17832 என்ற எண்ணிற்கு வாட்ஸ் அப் மூலமோ, குறுஞ்செய்தி மூலமோ 4.11.24க்குள் முன்பதிவு செய்யவும்.

மேற்கண்ட தகவல்களை சிறுகமணி வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவித்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# முள்ளிப்பள்ளம் கிராம வேளாண் முன்னேற்றக்குழுவுக்கு ராபி பருவ பயிற்சி



மதுரை, அக்.30

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டாரத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் முள்ளிப்பள்ளம் கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்றக்குழு ராபி பருவ பயிற்சி நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் பாண்டி கூறுகையில், வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் மத்திய மற்றும் மாநில திட்டங்கள் மற்றும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானிய திட்டங்கள் பற்றி எடுத்து விளக்கினார். மேலும் மதுரை வேளாண்மை கல்லூரி உதவி பேராசிரியர் கிருஷ்ண சுரேந்திரன் கலந்து கொண்டு ராபி பருவத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெல் பயிரின் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்தும் மற்றும் தென்னை மர சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்தும் விளக்கினார். வேளாண்மை அலுவலர் சத்தியவாணி கூறுகையில், வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள இடுபொருட்கள் மற்றும் உயிர் உரங்கள் இருப்பு மற்றும் பயன்பாடுகள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கினார். வேளாண் பொறியியல் துறை உதவி பொறியாளர் காசிநாதன் கலந்து கொண்டு துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் மானிய திட்டங்கள் பற்றி விளக்கினார். துணை வேளாண்மை அலுவலர் பெருமாள், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் பற்றி கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் விக்டோரியா செலஸ் காண்டா மிருக வண்டு கட்டுப்படுத்தும் முறைகள் இனகவர்ச்சி பொறி அமைத்தல் பற்றி விளக்கினார். மற்றும் வட்டார தொழில் மற்றும் நுட்ப மேலாளர் பிரியா உழவன் செயலி பயன்பாடுகள் குறித்து விளக்கினார். உதவி தொழில் நுட்ப மேலாளர் அருணாதேவி நன்றி கூறினார் மற்றும் இப்பயிற்சிகான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் பூமிநாதன் சிறந்த முறையில் செய்திருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# கிராம முன்னேற்ற குழு பயிற்சி



திருச்சி, அக்.30

திருச்சி மாவட்டம், வையம்பட்டி வட்டாரத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை கிராமத்தில் கிராம முன்னேற்ற குழு பயிற்சி நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குனர் முத்துசாமி தலைமை தாங்கினார். அவர் கூறுகையில் நவம்பர் 15 தேதிக்குள் பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளை அறிவுறுத்தினார்.




மேலும் வேளாண்மை துறையில் உள்ள மானிய திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். உதவி தோட்டக்கலை அலுவலர் சிவநாதன், சொட்டு நீர் பாசனம் மற்றும் தோட்டக்கலை துறை திட்டங்கள் குறித்து கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் வேளாண் வணிகம் மாரிமுத்து, களம் கட்டுதல் குறித்து கூறினார். மேலும் அவர் கூறுகையில் வேளாண் விளை பொருள்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்தல் குறித்து எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் செல்லப் பாண்டி கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தார். அட்மா உதவி தொழில்நுட்ப மேலாளர் ரவிவர்மா அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் சிறுதானிய சாகுபடி முக்கியதுவத்தை கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் அருணாச்சலம் இயற்கை முறையில் வேளாண்மை பயிர்கள் சாகுபடி தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தார். இப்பயிற்சிக்கான ஏற்பாட்டினை உதவி தொழில்நுட்ப மேலாளர் மாணிக்க பிரகாஷ் செய்திருந்தார்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 30.10.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 35 | 38 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 38 | 42 | 57 | உருளை (பிற) | 40 | 44 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 48 | 57A | உருளை(ஊட்டி) | 58 | 62 |
| 2 | வெண்டை | 35 | 40 | 58 | மேரக்காய் | 25 | 30 |
| 3 | தக்காளி (நாடு) | 27 | 30 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 25 | 30 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 22 | 25 | 60 | கேரட் | 55 | 60 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 60 | 64 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 44 | 48 |
| 6 | புடலை | 35 | 38 | 62 | நூல்கோல் | 32 | 36 |
| 7 | பீர்க்கன் | 35 | 40 | 63 | டர்னிப் | 38 | 42 |
| 8 | சுரைக்காய் | 25 | 30 | 64 | மு.கோஸ் | 20 | 25 |
| 9 | பாகற்காய் | 40 | 44 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 35 | 38 | 66 | காளிபிளவர் | 40 | 46 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 0 | 0 |
| 12 | அரசாணி | 15 | 20 | 68 | பூண்டு | 260 | 310 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 30 | 34 | 69 | இஞ்சி | 60 | 145 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 30 | 34 | 70 | புருக்கோலின் | 110 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 54 | 58 | 71 | பென்னி பீன்ஸ் | 110 | 120 |
| 16 | பெ.வெங்காயம்(புதியது/பழையது) | 55 | 58 | 72 | குடமிளகாய் | 70 | 74 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 34 | 73 | ஊட்டி அவரை | 0 | 0 |
| 18 | பச்சை மொச்சை | 55 | 60 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 45 | 50 | 71A | | | |
| 20 | தேங்காய் | 48 | 52 | | | | |
| 21 | மாங்காய் | 50 | 55 | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 78 | 82 | 75 | எலுமிச்சை | 70 | 80 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 56 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 28 | 32 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 22 | 26 |
| 28 | கறிவேப்பிலை | 45 | 48 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 60 | 64 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 10 | 13 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 18 | 20 | 82 | ஆப்பிள் | 100 | 140 |
| 32 | தண்டுக்கீரை | 18 | 20 | 83 | ஆரஞ்ச் | 40 | 65 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 18 | 20 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 18 | 20 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 18 | 20 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 10 | 12 | 89 | | | |
| 39 | வல்லாரை | 10 | 12 | 90 | கதளி | 50 | 55 |
| 40 | கோவக்காய் | 32 | 36 | 91 | பூவன் | 38 | 42 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 48 | 52 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 40 | 45 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 24 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 25 | 28 | 96 | நேந்திரன் | 45 | 48 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 22 | 26 | 97 | செவ்வாழை | 75 | 80 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 45 | 50 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 65 | 75 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 34 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 30 | 35 | | | | |

# எள்ளில் அறுவடை மற்றும் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள்

**அறுவடைக்கான அறிகுறிகள்**

- செடியில் கீழிலிருந்து 25 சத இலைகள் உதிர்ந்துவிடும்.
- காய்கள் மற்றும் தண்டுப்பாகங்கள் பழுப்பு நிறமாக மாறும்.
- செடியின் அடியிலிருந்து மேலாக உள்ள 10வது காயில் உள்ள விதைகள் கறுப்பாக (முதிர்வு) மாறியிருக்கும்.
- மேற்கண்ட அறிகுறிகள் தென்படும்பொழுது அறுவடை செய்துவிட வேண்டும்.
- தவறினால் காய்கள் வெடித்து சிதறி மகசூல் மிகவும் குறையும்.

**அறுவடை**

- செடிகளை முழுவதுமாக அறுவடை செய்து தலைகீழாக 3-4 நாட்களுக்கு குவித்து வைக்க வேண்டும்.
- செடிகளை வளையக் கூடிய தன்மையுள்ள மூங்கில் கழியினால் அடித்து விதைகளைப் பிரித்தெடுக்கலாம்.

**விதைச் சுத்திகரிப்பு**

- நல்ல தரமான, விதைகளைப் பெறுவதற்கு 4/64 (1.6 மி.மீ) வட்ட கண் அளவு கொண்ட சல்லடைக் கொண்டு சலித்தல் வேண்டும்.
- விதைகளை 8-9 சத ஈரப்பதம் வரும் வரையில் நன்கு உலர்த்த வேண்டும்.

**விதைச் சேமிப்பு**

- விதைகளின் ஈரப்பதத்தினை 8 முதல் 9 சதவிகிதமாக குறைத்து பின் சாக்கு அல்லது துணிப் பைகளில் குறுகிய கால சேமிப்பிற்காக (8-9 மாதங்கள்) சேமித்து வைக்கலாம்.
- விதைகளின் ஈரப்பதத்தினை 6 முதல் 7 சதவிகிதமாக குறைத்து பின் பாலித்தீன் உள்உறை கொண்ட சாக்குப் பைகளில் மத்திய /இடைக்கால சேமிப்பிற்காக (12-15 மாதங்கள்) சேமித்து வைக்கலாம்.
- விதையின் ஈரப்பதத்தினை 5 சதவிதத்திற்கும் குறைவாக உலர்த்தி 700 காஜ் கன அளவு கொண்ட அடர் பாலித்தீன் பைகளில் நீண்ட கால (15 மாதங்களுக்கு மேல்) சேமிப்பிற்காக சேமித்து வைக்கலாம்.

இதனை சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்தார்.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
CML-6400119610
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# மானாவாரி கரிசல் நிலத்திற்கு ஏற்ற இரகம் சோளம் – கே.13

சிறுதானிய பயிர்களில் சோளப்பயிர் பெரும்பாலும் வறண்ட பகுதிகளிலும், மானாவாரிப் பகுதிகளிலும் சாகுபடி செய்யப் படுகிறது. சோளம் போன்ற சத்துமிகு சிறுதானியங்களுக்கு தேவை அதிகரித்துள்ள நிலையில் அதிக விளைச்சல், பூச்சி மற்றும் நோய்களுக்கு எதிர்ப்பு சக்திமிக்க இரகங்கள் உருவாக்கும் முயற்சியின் பலனாக புதிய சோள இரகம் கே13 உருவாக்கப்பட்டது.

இந்த இரகம் தென்மாவட்டங்களில் மானாவாரி மற்றும் இறவையில் பயிர் செய்ய ஏற்றது. இது குறைந்த நாட்களில் பயிரிடலாம். (95-100நாட்கள்) கோடையிலும் பூக்கும் தன்மை கொண்டது.

தானியம் மற்றும் தட்டை சாகுபடிக்கு ஏற்றது. தானியம் இளமஞ்சள் நிறமுடையது. தட்டை சன்னமானதாய் இருப்பதால் கால்நடைகள் கழிக்காமல் உண்ணும். கே13 இரகமானது சிறந்த சமையல் பண்புகளைக் கொண்டுள்ளதால் உணவிற்கு ஏற்ற இரகமாக காணப்படுகிறது. மேலும், இந்த இரகத்தில் புரதச்சத்து 10.9 சதவிகிதம், இரும்புச்சத்து 39.78 சதவிகிதம், நார்ச்சத்து 320 சதவிகிதம் கொண்டது.

மானாவாரியாக பயிர் செய்ய ஏக்கருக்கு 6 கிலோ விதை தேவை வரிசைக்கு வரிசை 45 செ.மீ மற்றும் செடிக்குச் செடி 15 செ.மீ இடைவெளியைப் பின்பற்ற வேண்டும். இப்பயிரின் அறுவடையில் சராசரியாக தானிய விளைச்சல் 1030 கிலோ / ஏக்கரும் தட்டை விளைச்சல் 45 டன் / ஏக்கரும் கிடைக்கும்.

குருத்து ஈ, தண்டுத் துளைப்பான் ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத் தன்மையும், தேன் ஒழுகல் மற்றும் அடிச்சாம்பல் நோய்க்கு எதிர்ப்புத் தன்மையும் கொண்டது. இந்த புது இரகங்களை பயன்படுத்தி நல்ல விளைச்சலை பெற்று பயன் பெறுமாறு திருநெல்வேலி விதைப்பரிசோதனை ஆய்வக வேளாண்மை அலுவலர் ஜெ.பி.சஜிதா கேட்டுக் கொள்கிறார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
IFFCO
NANO
UREA
PLUS
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# ஈரோடு வட்டாரத்தில் கிராம வேளாண் முன்னேற்றக்குழு விவசாயிகள் பயிற்சி



ஈரோடு, அக்.30

ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை கீழ், செயல்படும் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் 2024-2025 ஆம் ஆண்டுக் கான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படும் கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்றக்குழு அமைக்கப்பட்டு அக்குழுக் களுக்கு ரபிப் பருவ விவசாயிகள் பயிற்சியானது கூரபாளையம் கிராமத்தில் நடைபெற்றது.

இது குறித்து ஈரோடு மற்றும் சென்னிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மா.சாமுவேல் அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை கீழ், செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படும் கூரபாளையம் வருவாய் கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்றக்குழு விவசாயி களுக்கு பயிற்சி ஈரோடு வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் வி.பிரியா தலைமையில் நடைபெற்றது. இந்த விவசாயிகள் பயிற்சியில் அங்கக ஆர்வலர் ம.கருப்பசாமி கலந்து கொண்டு தோட்டக்கலை பயிர்களில் ஏற்படும் நோய்கள், பூச்சி தாக்குதல் மற்றும் அவற்றை அங்கக முறையில் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றிய விபரங்களை விளக்கமாக எடுத்துரைத்தார்.

வேளாண்மைத் துறையின் சார்பாக வேளாண்மை அலுவலர் ராம்ஜிவன்யா கலந்து கொண்டு வேளாண்மைத் துறையின் மானிய விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார். தோட்டக் கலை அலுவலர் ப.சவிதா கிராம வேளாண் முன்னேற்றக்குழு அமைத்ததன் முக்கிய நோக்கமான தரிசு நிலங்களை சாகு படிக்கு கொண்டு வருதல், நீர் ஆதாரங்களை பெருக்குதல் மற்றும் சூரிய மின்சக்தியின் மூலம் பம்பு செட்டுகள் அமைத்தல் மற்றும் தோட்டக்கலைத் துறையின் இடுபொருட்களின் மானிய

விபரங்களையும் தோட்டக்கலை பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தம் முறை குறித்தும் தெளிவாக விளக்கினார்.

ஈரோடு வட்டார செயற்பொறியாளர் டி.சந்திரசேகரன் சூரிய மின்சக்தியின் மூலம் பம்பு செட்டுகள் அமைத்தல், நுண்ணீர் பாசன மானிய விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.சா.கிருத்திகா அட்மா திட்டங்களின் செயல்பாடுகள், அங்கக இடுபொருட்கள் தயாரிக்கும் முறைகள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். உதவி தோட்டக்கலை அலுவலர் புஷ்பலதா உழவர் செயலி மூலம் இடுபொருட்கள் பதிவு செய்யும் முறைகள் இடுபொருட்களின் மானிய விபரங்கள் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்.

உதவி தோட்டக்கலை அலுவலர் கவிதா கலந்து கொண்டு தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படும் திட்டங்களை எடுத்துரைத்தார்.



# வேளாண் பொறியியல் துறை சார்பாக நடத்தப்படும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் குறித்த தகவல்



இன்றைய விவசாயப் பணிகளில் கால்நடைகளுக்கு மாற்றாக இயந்திரங்கள் முழுமையாக பங்கெடுத்த வருகிறது. இன்று இயந்திரங்களின் உதவியால் தான் உழவு, நடவு பணி களை எடுத்தல் அறுவடை போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது நாம் அறிந்ததே.

வேளாண் பணிகளை மேற்கொள்ளும் இயந்திரங்களை கிராமப்புறங்களிலே பழுது நீக்கிட ஆட்கள் இல்லாத நிலை தான் அதிகமாக உள்ளது. இன்றைய காலத்துல நிறைய இளைஞர்கள் நன்றாக படித்து தான் விவசாய பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். படித்த இளைஞர்களுக்கு போதுமான வேலை வாய்ப்பு கிராமப்புறங்களில் இல்லை. ஒவ்வொரு கிராமங்களிலும் 5-10 டிராக்டர் இருந்தாலும்கூட அதனில் ஏற்படும் பழுதுகளை சரி நீக்க தெரியாத நிலையில் தான் உள்ளனர். இதனை போக்கிட தமிழக அரசு வேளாண்மை பொறியியல் துறை சார்பாக திறன் மேம்பாட்டுப் பயிற்சி படித்த இளைஞர்களுக்கு கட்டணமில்லாத கீழ்க்கண்ட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**என்ன என்ன பயிற்சி எங்கு நடைபெறுகிறது?**

1) வேளாண் இயந்திரங்கள் குறித்த செயல் விளக்கப்பயிற்சி - பயிற்சி காலம் 16 நாட்கள்.

2) டிராக்டர் ஓட்டுநர் பயிற்சி - பயிற்சி காலம் 22 நாட்கள்.

இந்த இரண்டு பயிற்சிகளும் படித்த 18 வயது முதல் 45 வயதுடையவர்கள் தகுதியானவர்கள். குறிப்பாக தொழில்நுட்ப பயிற்சி படித்தவர்களும் சேரலாம்.

இந்த இரண்டு பயிற்சியும் வேளாண் பொறியியல் துறை சார்பாக திருச்சி, திருவாரூர், திருநெல்வேலி, கோவை, மதுரை, வேலூர் ஆகிய 6 இடங்களில் உள்ள அரசு இயந்திர கலப்பை பணிமனைகளில் வழங்கப்படுகிறது.

**இந்த பயிற்சிகளில் ஏதேனும் சிறப்பு தன்மை உண்டா?**

கிராமப்புற இளைஞர்கள் டிராக்டர் என்ஜின் செயல்பாடு குறித்த தெளிவாக அறிந்து கொள்ளவும், டிராக்டர் ஓட்டுநர் பயிற்சியினை எளிமையாக பெறவும் வாய்ப்புள்ளது.

டிராக்டர் ஓட்டுவதற்கான பாவனை பயிற்சி சாதனம் (TRACTOR SIMULATOR) பல்வேறு வகையான சூழல்களை சித்தரித்து, மென் பொருள் மூலமாக பயிற்சியை வழங்கும் ஒரு நவீன தொழில்நுட்ப பயிற்சியாகும். ஆனால் பயிற்சியாளர்கள் தங்கி படிக்க விடுதி வசதி இல்லை.

எனவே இத்தகைய அரிய வாய்ப்புள்ள பயிற்சியை கிராமப் புறங்களில் வேளாண்மையில் ஈடுபடும் படித்த இளை-ஞர்களுக்கு உதவும் என்பதில் மாற்று கருத்து இல்லை.




மேலும் இது குறித்து விபரங்கள் அறிய தங்களுடைய வட்டார வேளாண் பொறியியல் (AGRICULTURAL ENGINEERING) உதவி பொறியாளர்களை அணுகலாம் அல்லது aedcesolar @gmail.comயில் தொடர்பு கொள்ளலாம்.

கிராமப்புறங்களில் உள்ள படித்த இளைஞர்களுக்கு இந்த திறன் மேம்பாட்டு பயற்சி அவர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்திட வழி வகுக்கும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மண்வளம் காப்பதில் ஊடுபயிர் மூடுபயிர் முக்கியத்துவம் மற்றும் பயன்கள்!

மண்ணின் வளம் என்பது மண்ணின் அங்கக கரிம அளவு, நுண்ணுயிர்களின் எண்ணிக்கை நீர்ப் பிடிப்பு தன்மை மண்ணில் எஞ்சியுள்ள தாவர ஊட்டச்சத்துக்களின் அளவு ஆகியவற்றை பொருத்து அறியப்படும் ஓர் அளவீடு மண்ணின் வளத்தினைக் காப்பதற்கு மூடுபயிர் ஊடுபயிர் மற்றும் நிலப்போர்வையும் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஏனெனில் மண்ணினை சூரிய ஒளிபடும்படி திறந்த வெளியில் விடும்பொழுது அங்கக கரிமம் குறைந்து மண்ணின் வளம் பாதிக்கப்படுகிறது. மேலும் இப்பயிர்களால் களைகளைக் குறைக்கவும், நீர் இழப்பு, பூச்சிகள் மற்றும் மண்ணரிப்பைக் குறைக்கவும் பயன்படுகிறது.

விவசாய நண்பர்களே ...
விவசாயம் சம்பந்தமாக உங்கள் சந்தேகங்களுக்கு...
ரிலையன்ஸ் பவுண்டேசனின்
கட்டணமில்லா உதவி தொலைபேசி எண்ணில் விளக்கம் பெறலாம்
1800-419-8800
Reliance Foundation

## மூடு பயிர்

இது எந்த வகை பயிராக வேண்டுமானாலும் இருக்கலாம். இப்பயிர் பருவகாலப் பயிர் அறுவடைக்குப் பின் மண்ணின் ஈரப்பதத்தைப் பயன்படுத்தி விதைக்கப்பட்டு குறுகிய காலத்தில் அப்பயிர்களின் வெகுவான வளர்ச்சியைப் பயன்படுத்தி மண்ணில் முழுவதுமாக போர்வை போல் விரிந்து சூரிய வெளிச்சத்தை மண்ணில் நேரடியாகப்படுவதை தவிர்ப்பதால் மூடுபயிர் என அழைக்கப்படுகிறது. இப்பயிர்கள் பயறு வகைப் பயிர்களாகவோ அல்லது வேறு வகையாகவும் இருக்கலாம். தட்டைப்பயறு, நரிப்பயறு, கொள்ளு, பாசிப்பயறு போன்றவை மூடுபயிர்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

## ஊடு பயிர்

பருவ கால பயிருக்குப் பின் அகன்ற இடைவெளியில் பயிர்கள் பயிரிட வேண்டிய காலத்தில் / அப்பயிரின் முன் வளர்ச்சி

காலக்கட்டத்தில் இரு வரிசைகளுக்கு இடையே உள்ள இடைவெளியை மறைக்க குறுகிய கால பயிர்களான உளுந்து பாசிப் பயறு, தட்டைப்பயறு போன்றவைகள் பயிரிடப்பட்டு மண்ணின் வளத்தை காப்பது ஊடுபயிரின் நோக்கமாகும்.

ஊடுபயிர்கள் வளர்ப்பதால் களைகள் கட்டுக்குள் வைக்கப்படுகின்றன. அவை குறுகிய காலப்பயிர்களாக இருப்பதால் பண்ணையின் வருமானத்தை அதிகரிக்கும் காரணியாகவும் அமைகின்றது என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேலு தெரிவித்தார்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# பாலாறு வேளாண்மைக் கல்லூரியில் மாணவர்களுக்கு இலவச காளான் வளர்ப்பு பயிற்சி



வேலூர், அக்.30

வளர்ந்து வரும் இந்த நவீன உலகில் மக்களுக்கு உணவின் மீதான ஈர்ப்பு அதிகரித்துள்ளது. நாள்தோறும் புதுப்புது உணவு வகைகளை ருசிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில், பல்வேறு உணவு வகைகளை தயார் செய்கிறார்கள். அந்த வகையில் தற்போது அனைவரின் கவனமும் காளான்கள் பக்கம் திரும்பி உள்ளது. காளான்கள் சைவ உணவகர்களுக்கு மாற்று உணவாக பார்க்கப்படுகிறது. சைவப் பிரியர்கள் மட்டுமல்லாமல் அசைவப் பிரியர்களும் காளானை விரும்பி உட்கொள் கின்றனர். இறைச்சியில் உள்ளதைப் போலவே காளானிலும் பல்வேறு விதமான சத்துக்கள் உள்ளன. அவற்றில் மிக முக்கியமாக வைட்டமின் B மற்றும் நார்ச்சத்துகள் பெருமளவு உள்ளது. ஆதலால் காளான் ஒரு இன்றியமையாத பொருளாகக் கருதப் படுகிறது.

இத்தகைய காளான் உற்பத்தியைப் பெருக்கும் விதத்தில் வேலூர் மாவட்டம், பாலாறு வேளாண்மைக் கல்லூரியில், கல்லூரி முதல்வர் முனைவர் N.தமிழ்செல்வன் தலைமையில் மாணவர்களுக்கு 28.10.24ல் இலவச காளான் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. முன்னதாக தாவர நோயியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் கு.விக்னேஷ் மாணவர்களுக்கு காளான் வளர்ப்பு பற்றியும், அதன் முக்கியத்துவம் மற்றும் சந்தைப் படுத்துதல் பற்றியும் விரிவுரை வழங்கினார். பின்னர்முனைவர் கு.விக்னேஷ், உதவிப் பேராசிரியை கோ.அர்சா மற்றும் ஆய்வக உதவியாளர் ச.வினிதா ஆகியோர் ஒன்றிணைத்து, பாலாறு வேளாண்மைக் கல்லூரியில் அமைக்கப் பெற்றுள்ள காளான் வளர்ப்புக் குடிலில் மாணவர்களுக்கு காளான் வளர்ப்பு செயல் முறை விளக்கப் பயிற்சி அளித்தனர். பயிற்சியில் மொட்டுக் காளான், சிப்பிக் காளான் மற்றும் பால் காளான் வளர்ப்பு முறைகள் பற்றி செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த பயிற்சி வகுப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துக் கொண்டனர். மேற்கொண்டு மாணவர்கள் தங்கள் பகுதிகளில் காளான் வளர்ப்புக் குடில் அமைத்து காளான் உற்பத்தி மற்றும் கிராமப் புற மக்களின் வாழ்வியலைப் பெருக்க உதவுமாறு அறிவுறுத்தப்பட்டது.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# வெண்மைப் புரட்சியின் தந்தை - வர்கீஸ் குரியன் - ஓர் பார்வை

வர்கீஸ் குரியன் (26 நவம்பர் 1921 – 9 செப்டம்பர் 2012) ஒரு இந்திய பால் பொறியாளர் மற்றும் தொழில்முனைவோர் ஆவார். வெண்மைப் புரட்சி எனஅழைக்கப்படும் இந்தியாவில் விரிவான பால் உற்பத்தி அதிகரிப்புக்கு முன்முயற்சிகளுக்கு பங்களித்து தலைமை தாங்கினார்.

குரியன் 1940 ஆம் ஆண்டில் மெட்ராஸ் பல்கலைக்கழகத்தில் இயற்பியல் துறையில் பட்டம் பெற்றார். மேலும் 1947 ஆம் ஆண்டில் மிச்சிகன் மாநில பல்கலைக்கழகத்தில் இயந்திர பொறியியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றார். 1949 ஆம் ஆண்டில், குரியன் இந்திய அரசாங்கத்தால் ஆனந்த் என்ற இடத்தில் அதன் சோதனை கிரீமரி (வெண்ணெய் மற்றும் பாலாடைக் கட்டி தயாரிக்கும் இடம்) நடத்துவதற்காக அனுப்பப்பட்டார். கைரா மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி யாளர்கள் சங்கம் 1950 ஆம் ஆண்டு அமுல் ஆனது. அமுல், கிராமங்களில் உள்ள பால் பண்ணையாளர்களை கூட்டுறவு களின் ஒரு பகுதியாக ஒழுங்கமைத்து பால் நுகர்வோருடன் நேரடியாக இணைத்தது.

1965 ஆம் ஆண்டில், புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்தின் (NDDB) தலைவராக குரியன் நியமிக்கப்பட்டார். இது இந்தியா முழுவதும் இதே போன்ற கூட்டுறவுகளை நிறுவ உதவியது மற்றும் கிராமப்புறங்களில் மிகப்பெரிய சுய-நிலையான தொழில்கள் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்கி கூட்டுறவு பால் பண்ணையை உருவாக்கியது. பால் மற்றும் பால் பொருட்களை கொள்முதல் செய்தல், பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகிய வற்றை கூட்டுறவு உரிமையாளர்களாக பால் பண்ணை யாளர்களே கட்டுப்படுத்தியதால் பால் கூட்டுறவு சங்கங்கள் பால் உற்பத்தியை அதிகரிப்பதில் வெற்றி பெற்றன. இது பால் உற்பத்தியில் பன்மடங்கு அதிகரிப்புக்கு வழிவகுத்தது மற்றும் 1998 இல் இந்தியா உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தியாளராக மாற உதவியது. பிற நாடுகளில் இந்த கூட்டுறவு மாதிரி பின்னர் சமையல் எண்ணெய்கள் உற்பத்தி போன்ற பிற விவசாயத் தொழில்களுக்குப் பயன்படுத்தப்பட்டது.

பால் உற்பத்தியை அதிகரிப்பதில் அவரது பங்களிப்பு களுக்காக, குரியன் இந்தியாவில் 'வெள்ளை புரட்சியின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார். அவருக்கு 1964 ஆம் ஆண்டில் ராமன் மகசேசே விருதும், 1989 ஆம் ஆண்டில் உலக உணவுப் பரிசும் வழங்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டில், இந்தியாவின் இரண்டாவது உயரிய குடிமகன் விருதான பத்மவிபூசண் பெற்றார். 1997இல் பிரெஞ்சு அரசாங்கத்தால் அவருக்கு விவசாயத் தகுதிக்கான ஆணை வழங்கப்பட்டது. குரியன் கைரா மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் யூனியன் லிமிடெட் (KDCMPUL)ஐ உருவாக்கினார். அதுபின்னர் அமுல் ஆனது. பால் சேகரிப்பு பரவலாக்கப்பட்டது மற்றும் கூட்டுறவுகளின் ஒரு பகுதியாக கிராமங்களில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக பால் கொள்முதல் செய்யப்பட்டது. குரியன் மற்றும் திரிபுவன்தாஸ் படேல் பால் பண்ணையாளர்களை ஒழுங்கமைக்க உதவுவதற் காக சர்தார் வல்லபாய் படேல் மற்றும் மொரார்ஜி தேசாய்




ஆகியோரால் ஆதரவு அளிக்கப்பட்டது. கிராம–சமூகத்தின் அனைத்துப் பிரிவினரின் பொருளாதார நல முன்னேற்றம், அவர்களிடையே கூட்டுறவை வளர்க்கவும், சாதி மற்றும் அவை சார்ந்த மோதல்களை அகற்றி அனைவரையும் ஒன்றிணையச் செய்யும் முறையில் குரியன் பணியாற்றினார். கூட்டுறவு பால் பண்ணை முயற்சியானது அருகிலுள்ள மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது மற்றும் பால் உற்பத்தி பற்றிய பயிற்சியில் மாணவர்களின் ஈடுபடுத்தினார். 1952 ஆம் ஆண்டில், தினசரி பால் கொள்முதல் 1948 ஆம் ஆண்டில் ஒரு நாளைக்கு வெறும் 200 லிட்டரிலிருந்து 20,000 லிட்டரை எட்டியது.

1964 ஆம் ஆண்டு அக்டோபரில் அமுலின் கால்நடைத் தீவனத் தொழிற்சாலையைத் திறப்பதற்காக ஆனந்த் சென்ற போது, அப்போதைய பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி, பால் பண்ணையாளர்களுடன் அவர்களது கூட்டுறவு குறித்து உரை யாடினார். 1965ஆம் ஆண்டில், பால் பண்ணையின் ஆனந்த் திட்டத்தை நாடு முழுவதும் நகலெடுக்க சாஸ்திரி குரியனை பணித்தார்.

இதற்காக தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம் (NDDB) நிறுவப்பட்டது. இது ஆனந்தை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்டு குரியன் அவர்களால் வழி நடத்தப்பட்டது.

குரியன் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) மற்றும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (UNICEF) மற்றும் உலக வங்கியின் உதவியுடன் 'ஆபரேசன் ஃப்ளட்' இன் ஒரு பகுதியாக கூட்டுறவுகளை மேம்படுத்த செய்தார்.



1970 முதல் 1979 வரையிலான முதல் கட்டத்தில், அவர் நாடு முழுவதும் உள்ள 18 சிறந்த பால் கொட்டகைகளைத் தேர்ந் தெடுத்து, பால் கூட்டுறவுகளை நிறுவி, அவற்றை அருகிலுள்ள முக்கிய நகரங்களுடன் இணைத்து, அங்குள்ள சந்தையைக் கைப்பற்றுவதில் கவனம் செலுத்தினார். ஆனந்த் மாதிரி குஜராத் முழுவதும் நகலெடுக்கப்பட்டது மற்றும் குரியன் அனைவரையும் குஜராத் கூட்டுறவு பால் சந்தைப்படுத்தல் கூட்டமைப்பின் (GCMMF) கீழ் கொண்டு வந்து ஸ்தாபனத்தின் 25வது ஆண்டு விழாவில் ஒரே அமுல் பிராண்டின் கீழ் தங்கள் தயாரிப்புகளை விற்பனை செய்தார். 1979 மற்றும் 1985க்கு இடைப்பட்ட இரண்டாம் கட்டத்தில், 290க்கும் மேற்பட்ட நகரங்களை உள்ளடக்கும் வகையில் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. 1979 ஆம் ஆண்டில் பால் கூட்டுறவுகளில் ஈடுபட்டுள்ள மேலாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஆனந்தில் கிராமப்புற மேலாண்மை நிறுவனத்தை நிறுவினார். 1985 ஆம் ஆண்டில் 43,000 கிராம கூட்டுறவு சங்கங்களில் சுமார் 4.25 மில்லியன் பால் உற்பத்தியாளர்கள் இருந்தனர் மற்றும் பால் பவுடர் உற்பத்தி ஆறு மடங்குக்குமேல் அதிகரித்தது.

1985 மற்றும் 1996க்கு இடையில் ஆபரேன் ஃப்ளட் கடைசி கட்டத்தில், குரியன் கூட்டுறவுகளை சுதந்திரமானதாகவும், தன்னிறைவு கொண்டதாகவும் மாற்றுவதில் கவனம் செலுத்தினார்.

இது கொள்முதல் மற்றும் உற்பத்தியை அதிகரிக்க உள்கட்டமைப்பை அதிகரிப்பது, பால் பதப்படுத்தும் வசதிகளை நிறுவுதல், சந்தைப்படுத்தல் மற்றும் பயிற்சி மேலாண்மை கவனம் செலுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. 1990-91 இல் தாராளமயமாக்கல் காரணமாக நாடு திறக்கப்பட்ட போதும், பால் வணிகத்தில் பன்னாட்டு நிறுவனங்களை நுழையவிடாமல் தடுக்க அவர் கடுமையாகப் போராடினார். 1998 இல் இந்தியா உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தியாளராக ஆனது. அமெரிக்காவை விஞ்சியது மற்றும் 2010-11 ஆம் ஆண்டில் உலகளாவிய உற்பத்தியில் சுமார் 17 சதவீத பங்களிப்பை வழங்கியது.

தகவல் : **மருத்துவர் சி.ராமகிருஷ்ணன், மருத்துவர் ப.கோகுல கிருஷ்ணன், உதவி பேராசிரியர்கள், முனைவர் மூ.சுதா, இணை பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், தேனி.**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# கன்று ஈன்ற கறவை மாட்டின் மேலாண்மை



கறவை மாடு வளர்ப்பில், கன்று ஈன்ற பின்பு பசுக்களை சரிவரப் பராமரிக்கவில்லையெனில் பசுக்களின் திறனுக்கேற்பப் பால் பெற முடியாமலும், மீண்டும் சினை பிடிப்பதில் சிரமங் களும் ஏற்பட்டு, பண்ணையாளர்கள் அதிக இலாபம் ஈட்ட முடியாமல் போகிறது. சில சமயங்களில் பசு மற்றும் கன்று இரண்டையுமே இழக்கவும் நேரிடுகிறது. எனவே, கறவை மாடு வளர்ப்பை இலாபகரமாக நடத்த, கன்று ஈன்றவுடன் மாடுகளின் பராமரிப்பு இன்றியமையாததாகும்.

## கன்று ஈன்றவுடன் கவனிக்க வேண்டியவை

பசுக்கள் கன்று ஈன்றவுடன், கன்றினைப் பசுவின் முன் படுக்க வைக்கவும். காய்ந்த, சுத்தமான தரையாகவோ அல்லது வைக்கோல், புல் மற்றும் கோணிப்பையைப் பரப்பி அதன் மீது கன்றினைப் படுக்க வைக்கவும். எக்காரணம் கொண்டும் கன்றினைத் துணி கொண்டு துடைக்கவோ, கால்களில் உள்ள குளம்புகளைக் கிள்ளி எடுக்கவோ கூடாது. ஏனெனில் கன்றினை மாடுகள் குறிப்பாக எருமைகள் நக்குவதால் தாய் மற்றும் சேய்க்கு ஒருவித இணைப்பை ஏற்படுத்துகிறது மற்றும் கன்றின் உடலைச் சூடேற்றுவதுடன் நெஞ்சுப் பகுதி உலர்ந்து, அழுத்தத்தினால் கன்று எளிதில் மூச்சுவிட ஏதுவாகிறது. கன்றின் மூக்கில் உள்ள சளியை மட்டும் துணி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.

பசுவின் மடியைக் கிருமிநாசினி கலந்த சுத்தமான தண்ணீர் கொண்டு கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும். பசுவின் பின்புறம் மற்றும் அறைப் பகுதியில் உள்ள இரத்தம் மற்றும் வழும்பு போன்றவற்றைக் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும். கொம்பு மஞ்சள் மற்றும் வசம்பு இவை இரண்டையும் அம்மியில் நன்கு அரைத்து அறைப்பகுதி முழுவதும் பூசுவதால் ஈக்கள் மொய்க்காமலும் புண் ஏற்பட்டிருந்தால் விரைவில் குணமாகவும் ஏதுவாக அமையும்.

கன்று பிறந்து அரைமணி நேரத்திற்குள், கன்றினைத் தாயின் மடிப்பக்கம் நிறுத்தி வைத்துப் பால் குடிக்க உதவி செய்ய வேண்டும். கன்று பால் குடித்து முடித்ததும் மடியில் உள்ள சீம்பாலைக் கறந்துவிட வேண்டும். சீம்பால் முழுமையாகக் கறந்துவிடாமல் கால் பாகம் மடியிலேயே இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் பசுக்களைப் பால் காய்ச்சல் என்னும் நோயிலிருந்து பாதுகாக்க வாய்ப்புள்ளது.

பசுக்கள் கன்று ஈன்றவுடன், சுத்தமான வெதுவெதுப்பான நீரைப் பருகக் கொடுக்க வேண்டும். எளிதில் ஜீரணிக்கக் கூடிய மாவுச் சத்துப் பொருளைக் கூழாகவோ அல்லது கஞ்சியாகவோ கொடுக்கலாம். தேவையான அளவு உலர் தீவனம் கொடுக்க வேண்டும். அடர் தீவனத்தைக் கூடுமான வரை தவிர்க்க வேண்டும். ஏனெனில், கன்று ஈன்றவுடன் கருப்பை சுருங்கு வதால். இரைப்பை விரிவடையும். அப்பொழுது அடர்தீவனம்




கொடுத்தால் அவை இரைப்பையில் தங்கி சரி வர ஜீரண மாகாமல், ஜீரணக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே விரிவடைந்த இரைப்பை அரை முதல் முக்கால் பாகம் நிரம்பும் வண்ணம் உலர்தீவனம், பொட்டு, தவிடு போன்ற நார்ச்சத்து உள்ள உலர்தீவனமும், எரிசக்தி அதிகம் உள்ள தீவனத்தைக் கஞ்சியாகவோ, கூழாகவோ கொடுத்தால் எளிதில் ஜீரணம் அடைய வாய்ப்புள்ளது.

கன்று ஈன்றவுடன் கருப்பை நன்கு சுருங்கி அதில் உள்ள திரவத்தை வெளியேற்ற எள்ளுப் பிண்ணாக்கு அரை கிலோ முதல் முக்கால் கிலோ (ஒரு நாளைக்கு) என்கிற விகிதத்தில் ஓரிரு நாட்களுக்குக் கொடுக்கலாம். இல்லையெனில் மருந்துக் கடைகளில் கிடைக்கும் எர்கோமெட்ரிக்ஸ் என்கிற மருந்தினை வாங்கி வாய் வழியாகக் கொடுக்கலாம். மருந்தின் அளவு மற்றும் மருந்தளிக்கும் நேரம் போன்றவற்றை அருகிலுள்ள கால்நடை மருத்துவரின் ஆலோசனை கொண்டு கொடுக்கப்பட வேண்டும்.

## நஞ்சுக்கொடி தங்குதல்

பொதுவாக, நஞ்சுக் கொடியானது கன்று ஈன்றவுடன் சுமார் 4 மணி முதல் 8 மணி நேரத்திற்குள் விழுந்துவிட வேண்டும். சில சமயங்களில் 12 மணி முதல் 24 மணி நேரமும் ஆகலாம். மேலும், நஞ்சுகொடி விழுந்தால்தான் பால் கறக்க வேண்டும் என பலர் நினைத்துக் கொண்டு பால் கறக்காமலேயே இருந்து விடுகின்றனர். இது மிகவும் ஆபத்தானது. இதனால் மடிநோயும் மற்றும் வலியினால் பசுக்கள் உணவு உண்ணாமலும், சில சமயம் பாலின் அளவும் குறைய வாய்ப்புள்ளது. நஞ்சுக்கொடி விழும்போது கவனமாக அப்புறப்படுத்த வேண்டும். இல்லையெனில் சில பசுக்கள் நஞ்சுக் கொடியைத் தின்றுவிடும். எதிர்பாராத விதமாகப் பசுக்கள் நஞ்சுக்கொடியை உட்கொண் டால், ஜீரணக்கோளாறு ஏற்படுமே தவிரப் பசுக்களுக்கு ஒன்றும் நேராது. பின்னர் ஓரிரு நாட்களுக்குள் சரியாகிவிடும். எனவே பண்ணையாளர்கள் அச்சப்பட வேண்டியது இல்லை.

**நாளை தொடரும்...**

தகவல் : **முனைவர் கோ.இராஜராஜன், இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில் நுட்பத் துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், உடுமலைப்பேட்டை - 642 205, திருப்பூர் மாவட்டம்.**

